செயற்பொறியாளர் அலுவலகம், பொபது., நீஆது., சிறப்புத் திட்ட கோட்டம், குளித்தலை அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : பொறி.அ.ந.சாரா,பி.இ.,எம்.பி.ஏ.,
செயற்பொறியாளர்,நீஆது.,

**செயல்முறை ஆணை எண். நிஎ2 /01/2021/ நாள்: 25.10.2021.**

பொருள்: பணியமைப்பு – நீஆது., - தமிழ்நாடு அமைச்சு பணித் தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய 2018-2019 மற்றும் 2019-2020 -ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வரும் திருமதி பு.ரேவதி, இளநிலை உதவியாளர், (பிறந்த தேதி: 11.11.1989) - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் மற்றும் தகுதி காண் பருவம் துவங்கியும் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3, அவர்களின் கடித எண்.24962 / PSD-1 / 2020/ நாள்: 29.05.2020.

2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொபது, சேப்பாக்கம், சென்னை -5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ். 3(3)/35935/2020/ நாள் : 17.09.2020.

3. செயற்பொறியாளர்,பொபது., கட்டட கட்டுமான கோட்டம்-I (மருத்துவப்பணி), சேப்பாக்கம், சென்னை அவர்களின் செ.மு.எண்: நிஎ2/547/ 2020/நாள்:24.09.2020.

******

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020 –ஆம் ஆண்டிற்கான போட்டித் தேர்வு தொகுதி - IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி பு.ரேவதி பார்வை 2 மற்றும் 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக 30.09.2020 பி.ப அன்று செயற்பொறியாளர், பொபது, கட்டட கட்டுமான கோட்டம்-I (மருத்துவப்பணி), சென்னை அலுவலகத்தில் பணியேற்றார்.

மேலும், திருமதி பு.ரேவதி, இளநிலை உதவியாளருக்கு அவர் அப்பதவியில் முதன்முதலாக பணியேற்ற நாளான 30.09.2020 பி.ப முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 தமிழ்நாடு சட்டம் 14/2016 –ல் உள்ள பணிவிதி 28 (1) –ன் கீழ் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

த.பி.பா…..

இதனைத் தொடர்ந்து திருமதி பு.ரேவதி இளநிலை உதவியாளர் இப்பதவியில் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிக்காண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி எண்: 34(a) இணைப்பு -5-ல் கண்டுள்ளவாறு தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவனிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையத்தால் நடத்தப் பெறும் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் தகுதிகாண் பருவ காலத்தில் வழக்குகள், தண்டனைகள் மற்றும் அசாதாரண விடுப்புகள் ஏதும் துய்க்காமல் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையாக உள்ள வழக்கின் தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் இப்பணிவரன் முறை ஆணை வழங்கப்படுகிறது.

தனியாருக்கு தகுதிகாண் பருவம் நிறைவாணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து ஆண்டு ஊதிய உயர்வுகளை பெறத் தகுதியுடையவராவார்.

செயற்பெறியாளர், நீஆது,
சிறப்பு திட்ட கோட்டம்,
குளித்தலை.

பெறுநர்
திருமதி பு. ரேவதி
இளநிலை உதவியாளர்,
செயற்பொறியாளர், பொபது., நீஆது.,
சிறப்பு திட்ட கோட்டம், குளித்தலை.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு